110 தி. மு. கழகத் தோழர்கள் கைது

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

திராவிட முன்னேற்றக் கழக தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆடி மீ 23உ	சனி (7—8—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆடி மீ 24உ	ஞாயிறு (8—8—54)	இதழ்: 47

சர்ச்சில் வெளியேறுவார்?

மாலங்கோவை சந்திப்பதில்

மந்திரிசபையுடன் கருத்து வேற்றுமை

லண்டன், ஆக. 6—

பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில் செப்டம்பர் திங்களில் இராஜினமா செய்யப்போவதாகக் கூறியுள்ளார்.

சர்ச்சிலின் 15 உறுப்பினர்கள் கொண்ட மந்திரி சபை, கிழக்கு–மேற்கு நாடுகளின் நட்பு வளர மாலங்கோவை, தான் சந்திக்க வேண்டுமென்ற யோசனையை நிராகரித்ததை ஒட்டியே சர்ச்சில் இராஜினமா செய்வதாக அமெரிக்க பத்திரிகையான 'டைம்ஸ்' குறிப்பிடுகிறது.

"மாலங்கோவைச் சந்திக்க சர்ச்சில் செல்வது, சரணடையச் செல்லும் பிரயாணமாகும்," என்று பிரிட்டிஷ் அமைச்சர் சாலிஸ்பரி கூறி, தான் இராஜினமா செய்வதாகக் கூறினாராம்.

சமீபத்தில் லண்டன் வந்திருந்த அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் பெடல்ஸ்மித், 'மாலங்கோவுடன் தனித்து சந்தித்துப் பேசும் நேரம் வீணானதாகும்," என்று சர்ச்சிலிடம் கூறினாராம்!

"ரஷ்ய வெளிநாட்டமைச்சர் மாலடோவ், ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் குருஷ்செவ் ஆகியவர்களுக்கிருக்கும் அதிகாரமே மாலங்கோவிற்கும் உள்ளது" என்று அமெரிக்காவில் நிலவும் நம்பிக்கையின் காரணமாகவே பெடல்ஸ்மித் இவ்வாறு கூறியதாகத் தெரிகிறது.

அடுத்த — — கட்டம்!

சிறையில் உள்ள தி. த. நா. காங்கிரஸ் தலைவர் நேசமணி அவர்கள் விடுதலை அடைந்த பின்னர், நாஞ்சில் தி. மு. கழகச் செயலாளர் ஜான் அவர்கள், அவருடன் கலந்து பேசி, அறப்போர் குறித்த போதுத் திட்டமொன்று வகுக்கப்பட்டு பின்னர் திரு. தமிழர் அறப்போரில் தி. மு. கழகத்தின அடுத்த கட்டம் துவங்கப்படும்.

பிரெஞ்சிந்தியா:

ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாம்!

அதிகார மாற்றம் பற்றி பலவித செய்திகள்

புதுச்சேரி, ஆக. 6—

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் அதிகார மாற்றம் குறித்து ஏற்கனவே பிரான்ஸ்—இந்திய சர்க்கார்களிடையே ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டதென்றும், இது பற்றிய அறிக்கை ஒன்று வெளியாகும் என்றும் செய்திகள் கூறுகின்றன.

பிரெஞ்சிந்தியாவில் உள்ள கல்வி, கலாச்சார ஸ்தாபனங்கள் பற்றியும், பிரெஞ்சு சர்க்காரின் சர்வீஸ்கள் பற்றியும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றனவாம்!

அதிகார மாற்றத்திற்கு ஒரு தேதி குறிப்பிடப்படும் என்றும், உண்மையான அதிகார மாற்றம் ஏற்படு முன்னர் வாக்கெடுப்பு ஒன்று நடைபெறும் என்றும் செய்திகள் கூறுகின்றன.

அதிகார மாற்றம் ஏற்படு முன்னர் இரு சர்க்கார்களும் சேர்ந்தாற் போல் ஆட்சி நடத்துவார்கள் என்று மற்றொரு செய்தி கூறுகிறது.

எந்த செய்தியும் உர்ஜிதமாகவில்லை.

பிரெஞ்சு அதிகாரிகள் வெளியேறும் ஏற்பாடுகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று தெரிகிறது.

தடியடி

புதுவை டியூப்ளே தெருவில் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரே இணைப்பு ஊர்வலமொன்றின் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள் என்று தெரிகிறது. இச்செய்கையை எதிர்த்து கோஷமிட்ட ஆயிரக்கணக்கான மக்கள்மீது போலீசார் சாக்கடை நீரை ஊற்றிக் கலைத்தார்களாம்!

அடையாள மறியல்

போலீசார் தடியடி

செங்கோட்டை நீதி மன்றத்தில் நடைபெற்ற தி. மு. கழக அடையாள மறியலின் போது போலீசார் தி. மு. கழகத் தொண்டர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிகிறது.

அறப்போர்

கைதானவர்

நாகர்கோவில்	79 பேர்
செங்கோட்டை	31 பேர்

ரூ. 4 லட்சம் உணவுப் பொருள் நஷ்டம்!

சென்னை, ஆக. 6—

சென்னை மாநிலத்தில் கிடங்குகளில் குவித்து வைத்திருந்த உணவுப் பொருள்களில் 10,345 மணங்கு உணவு தானியங்கள் கெட்டுப் போய்விட்டதால் அரசாங்கத்திற்கு ரூ. 4,03,918 நஷ்டம் ஏற்பட்டது என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் குறிப்பிட்டார். இந்த கெட்டுப்போன உணவுப் பொருளை மக்கள் உண்ண முடியாவிடினும் கால்நடைகளுக்கு உணவாக்கக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'சீட்டோ':

பர்மா நிராகரிக்கிறது!

தென்கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தைப் பர்மா நிராகரித்து விட்டது. 'கொழும்பு அரசு' நாடுகளில் 'சீட்டோ' பற்றி தனது கருத்தைக் கூறாத நாடு இலங்கை ஒன்றுதான்.

போர்ச்சுகீஸ் இந்தியா:

கோவாவில் எட்டு பேர் மரணம்

20 நீக்ரோ துருப்புகள் கைது

பெல்காம், ஆக. 6—

எட்டு கோவாக்காரர்கள் போர்ச்சுகீசிய துருப்புகளால் சுடப்பட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது. விடுதலை இயக்கத்தினருக்கு அவர்கள் உதவி செய்ததாக சந்தேகப்பட்டார்களாம்.

கதர்க் குல்லாய் அணிந்த ஒருவர் நடுத்தெருவில்சென்றபுதனன்று சுடப்பட்டார் என்று தெரிகிறது.

டாமனில் கோவா மக்களைச் சுட மறுத்த 20 நீக்ரோ சிப்பாய்களை கோவா இராணுவ காரியாலயத்தினர் கைது செய்தனர்.

நீக்ரோ சிப்பாய்கள், டாமன் கிராமத்தில், ஆதிவாசி பெண்களைக் கற்பழிகின்றனர் என்று செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் போர்ச்சுகீசிய போர்க் கப்பல் ஒன்று கராச்சி வந்திருக்கிறதாம். இது சில நாட்களில் கோவா வருமென்று தெரிகிறது.

கோவாவைவிடாமல் பிடித்துக் கொண்டிருக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் திட்டமிடுகிறது என்று ரஷ்ய இராணுவ பத்திரிகையான 'ரெட் ஸ்டார்' எழுதியுள்ளது.

அமைச்சர் அறிவிப்பு

போர்ச்சுகீசிய காலனி அமைச்சர், போர்ச்சுகீசிய இந்தியப் பகுதிகளின் கௌரவத்தைக் காப்பாற்ற சர்க்கார் எல்லா முறைகளையும் கையாளுமென்று கூறியுள்ளார்.

திரு-கொச்சி அடையாள மறியலில் தி. மு. க. வெற்றி

அறப்போர் குறித்து திரு—கொச்சி சர்க்கார் அறிக்கை

மறியல் வீரர்கள் மீது போலீசார் தடியடி!

நாகர்கோவில், செங்கோட்டையில் அமைதியான மறியல் நடைபெற்றது

திருவாங்கூர் தமிழர் அறப்போரில் புதிய கட்டம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செங்கோட்டை, நாகர்கோவில் நீதிமன்றங்களில் அடையாள மறியல் செய்து, திரு—தமிழர் அறப்போரில் தங்கள் பங்கினைச் செலுத்தினர்.

மறியல் செய்த கழக வீரர்கள், "தமிழ் வாழ்க," "நாஞ்சில் நாடு தமிழருக்கே," "மத்திய சர்க்காரே நியாயம் வழங்கு," என்பன போன்ற ஒலிகளுடன் காலை 11 மணியிலிருந்து தனித்தனிக் குழுவாக மறியலில் ஈடுபட்டனர்.

அறப்போர்க் களங்களில் தி. மு. கழக முன்னணி வீரர்கள் வி. எம். ஜான், இரெ. இளம்வழுதி, மதுரை முத்து, தூத்துக்குடி நடராசன், வன்னியபெருமாள் ஆகியோர் கழகத் தோழர்களுக்கு ஊக்கமளித்தனர்.

★

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திய அடையாள மறியல் பற்றி திரு—கொச்சி சர்க்கார் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது:—

"சென்னை மாநிலத்தைச் சேர்ந்த தமிழர்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாகர்கோவில் கிளைக்கழகத் தொண்டர்கள், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரையின் வேண்டுகோளின்படி மறியல் செய்தனர்."

"காலை 11-மணிக்கு 10 பேர் கொண்ட குழுவினர் சேஷன்ஸ் நீதிமன்றத்தில் நுழைந்து கோஷமிட்டனர்; அவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் இரண்டாவது குழு ஒன்றும் அதே முறையில் கைது செய்யப்பட்டது."

"சேஷன்ஸ் நீதிமன்றத்திலும் தலைமை முனிசீப் நீதிமன்றத்திலும் மீண்டும் ஐந்து குழுவினர் மறியல் செய்தனர்; அவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்தனர்."

தொண்டர்கள் மீது வழக்கு

அறப்போரில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்ட 110 பேர்களில் 20 பேர் மீது மட்டும் வழக்குத் தொடரப்பட்டதாம். மற்றவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

வழக்குத் தொடரப்பட்ட 20 பேர்களில் முதல் மூன்று பேருக்கு தலா 4 நாட்கள் சிறையும், ரூ. 10 அபராதமும், கட்டத் தவறினால் மேலும் 3 நாள் சிறைவாசமும் விதிக்கப்பட்டதென்று தெரிகிறது.

மறியல் விவரம்

திருவாங்கூர் தமிழர் அறப்போரில் திராவிட முன்னேற்றக் கழக அடையாள மறியல் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது.

ஒரு மாத காலமாக நடைபெறும் திரு-தமிழர் அறப்போர் இன்று ஒரு புதிய கட்டத்தை அடைந்தது.

நாகர்கோவில், செங்கோட்டை நீதி மன்றங்களில் திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் காலை 11 மணி முதல் அமைதியாக மறியல் செய்தனர்.

நாகர்கோவில் மாவட்ட நீதி மன்றத்தில் தி. மு. க. அறப்போர் வீரர்கள் 10 பேர் கொண்ட குழுவினராக் ஏழு தடவைகளும், பின்னர், ஒன்பது பேர் கொண்ட குழுவினர் ஒரு தடவையும் மறியல் செய்தனர்.

நாகர்கோவிலில் அறப்போர் நடத்திய தி. மு. கழக தொண்டர்கள் 79 பேரையும் திரு—கொச்சி போலீசார் கைது

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 7—8—54 சனி

உரிமை நிலைத்தது!

முசாதிக் வெற்றி பெற்றார்!

மூன்றாண்டுகளாக உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்துவந்த ஈரான் எண்ணெய்ப் பிரச்சினையில் இறுதியாக ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

சிறையில் உள்ள முதுகிழவர் தனது கொள்கை வெற்றி பெற்றுவிட்டதுகண்டு மகிழ்கிறார்!

ஈரான் எண்ணெய்க் கிணறுகள், ஈரான் மக்களுக்கே உரிமையுடையன என்று மூன்றாண்டுகளுக்கு முன்னே முசாதிக் ஈரான் பாராளுமன்றத்தில் சட்டமொன்றை இயற்றினார்.

ஈரான் நாட்டிற்குச் சொந்தமான எண்ணெய்க் கிணறுகளில் ஆங்கிலோ ஈரான் எண்ணெய்க் கம்பெனியார் ஆதிக்கம் பெற்றிருந்தனர்; எண்ணெய் எடுக்கவும், அதனை விற்பனை செய்யும் உரிமையையும் தங்களிடமே வைத்துக்கொண்டு, வரியின் மூலமாக ஆண்டொன்றுக்கு சுமார் 50 கோடி ரூபாயை மட்டும் ஈரான் சர்க்காருக்கு அளித்து வந்தனர்.

தங்களுக்கு உரிமையுள்ள எண்ணெய்க் கிணறுகளை வேற்று நாட்டாரிடம் தந்துவிட்ட நிலையையும், அந்த உரிமைகள் தங்களிடம் இருப்பதால் ஈரான் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தங்கள் விருப்பம்போல் மாற்றியமைக்கும் வாய்ப்புகளுடன் ஆங்கிலேயர்கள் இருப்பதையும் கண்டு கொதித்து எழுந்த மக்களின் பிரதிநிதியாய் முசாதிக் விளங்கினார்! ஈரான் எண்ணெய்க் கிணறுகள் ஈரானுக்கே சொந்தமானவை என்று முசாதிக் சட்டமியற்றினார்!

இதைக்கண்டு, ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தனது அரசியல் சூழ்ச்சிகள் அனைத்தையும் பயன்படுத்தி, முசாதிக் கொள்கையைத் தோல்வியடையச் செய்ய முயன்றது; ஆனால், ஈரான் மக்கள் முசாதிக் காட்டிய வழி செல்ல உறுதி கொண்டனர்!

ஈரான் மன்னர் ஷா நாட்டை விட்டு வெளியேறினார்!

ஆங்கிலோ-ஈரான் எண்ணெய்க் கம்பெனி உற்பத்தியை நிறுத்தியது!

நாட்டு வருமானத்தில் முக்கிய பகுதியான எண்ணெய் வருமானத்தைக் கிடைக்க முடியாதபடி தடுத்து விட்டால், ஈரான் சர்க்கார் பணிந்துபோகுமென்று ஆங்கிலேயர் எண்ணினர்!

ஆனால், ஈரான் நாட்டு மக்கள் அந்தப் பொருளாதார நெருக்கடியைத் தாங்கிக் கொண்டார்கள்! வறுமையின் வாட்டுதலிலும் உரிமையை மாற்றானிடம் விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டனர்!

பின்னர், ஈரானில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் நாட்டை விட்டுச் சென்ற மன்னர் ஷா திரும்பி வந்தார். முதுகிழவர் முசாதிக் சிறைக்குள் தள்ளப்பட்டார். முசாதிக்கைத்தான் சிறையில் அடைக்க முடிந்ததேயன்றி, அவரது கொள்கையை நாட்டு மக்கள் மனதிலிருந்து அகற்ற முடியவில்லை!

ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இப்பிரச்சினையை உலகப் பிரச்சினையாக்கி, மத்திய கிழக்கில் கொந்தளிப்பை உண்டுபண்ணி, பொருளாதார நெருக்கடியின் மூலமாகவும், வழக்கமாகத் தான் கையாளும் இராஜதந்திர முறைகளாலும் ஈரானைப் பணிய வைக்க முயன்றது; ஆனால், முடியவில்லை!

முதுகிழவர் முசாதிக் தூவிவிட்டுப்போன உரிமை எண்ணம் நாட்டு மக்களிடையே நிரந்தரமாகிவிட்ட காரணத்தால், மூன்றாண்டுகளாக வறுமையின் எல்லையில் வாழ்ந்த போதிலும், உரிமையைப் பறிகொடுத்த சோற்றுத் துருத்திகளாக வாழ ஈரான் மக்கள் மறுத்து வந்தனர்!

காலம் மாறிற்று! உறுதியோடிருந்தவர் வெற்றி கண்டனர்!

இன்று ஈரான் எண்ணெய்க் கிணறுகள் ஈரானுக்கே உரிமையென்பது உறுதியாகிவிட்டது!

எண்ணெய்க் கிணறுகள் நாட்டின் பொதுச் சொத்து என்பது மட்டுமல்ல; அந்த எண்ணெய்க் கிணறுகளில் எண்ணெய் எடுக்கும் ஏகபோக உரிமை ஆங்கிலோ-ஈரான் கம்பெனியினுடையது என்ற நிலையும் மாறிவிட்டது!

புதிதாக ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி உலகின் மிகப் பெரிய எண்ணெய்க் கம்பெனிகளான எட்டு கம்பெனிகளுக்கு ஈரானில் எண்ணெய் எடுக்கும் பணியில் ஈடுபட அனுமதி அளித்திருக்கிறது, ஈரான் சர்க்கார்!

ஏகபோக உரிமையுடன் தொழில் நடத்திய காரணத்தால் ஆங்கிலோ – ஈரான் கம்பெனியார், தாங்கள் விரும்பிய அளவே ஈரான் சர்க்காருக்கு வரி செலுத்தி வந்தார்கள்; சுமார் 50 கோடி ரூபாய்க்குக் குறைவாகவே கொடுத்துவந்தார்கள்.

இன்று ஈரான் சர்க்காருக்கு எண்ணெய்க் கம்பெனிகளிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ 67 கோடியில் ஆரம்பித்து இன்னும் மூன்றாண்டுகளில் ரூ. 100 கோடி வீதம் கிடைக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது

இதிலே முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய மாற்றம், முன்பு ஆங்கிலோ-ஈரான் கம்பெனி, எண்ணெய்க் கிணறுகளை தங்கள் சொந்த சொத்துபோல் பாவித்து ஈரான் சர்க்காருக்கு ஏதோ காசுகள் கொடுத்து வந்தனர்; ஆனால், இன்று செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தமோ, ஈரான், தன் எண்ணெய்க் கிணறுகளில் வேறு நாட்டுத் தொழிலாளிகளை வேலை வாங்கிக் கொள்கிறது என்பது தான்!

தனது சொந்தத் தேவைகளுக்காக ஈரான் தனியாக தேசிய எண்ணெய்க் கம்பெனி ஒன்றை உருவாக்கியிருக்கிறது.

ஈரானில் எண்ணெய் எடுக்கும் கம்பெனிகள், தங்கள் உற்பத்தியில் 12½ சதவிகித எண்ணெயை ஈரான் சர்க்காரின் விருப்பம்போல் விற்பனை செய்ய ஒப்புக் கொண்டிருக்கின்றன;

இறுதியாகச் சொல்ல வேண்டுமென்றால், மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலோ-ஈரான் எண்ணெய்க் கம்பெனி ஈரானில் எண்ணெய் எடுக்க ஏகபோக உரிமை பெற்று, நாடாள்வோரை ஆட்டிப்படைக்கும் வல்லமையுடன் விளங்கியது!

இன்றோ, ஈரானில் எட்டு எண்ணெய்க் கம்பெனிகள், ஈரான் சர்க்காருக்குச் சொந்தமான எண்ணெய்க் கிணறுகளில் ஈரான் சர்க்காரின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு தொழில் செய்கின்றன,

இந்த வெற்றியைத் தடை செய்ய எத்தனையோ முயற்சிகள் நடைபெற்றன. அவைகளை எல்லாம் கடந்து ஈரான் மக்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டி விட்டனர்; அதுவும் உலக வல்லரசுகளுக்கு முன்!

உரிமைப் போரில் முதல் கட்டத்தில் வெற்றி பெற்ற ஈரான் மக்களைப் பாராட்ட விடுதலை தாகம் கொண்டவர்கள் யாரும் தயங்கமாட்டார்கள்!

மொராக்கோவில் கலகம்

4 யூதர்கள் கொலை; 12 அராபியர்கள் பலி!

போலீஸ் ஸ்டேஷனுக்குத் தீயிட்டனர்

பிரெஞ்சு ஆட்சியை எதிர்த்து அரேபியரின் ஒரு மாத கலகம்

ரபாட், ஆக 6—

அரேபியர்கள் கலகக்காரர்களால் தூண்டப்பட்டு வெறிகொண்டு, யூதர்கள் கடைகளைக் கொள்ளையடித்தும் பல யூதர்களைக் கொலை செய்தும் வருகின்றனர்.

எண்ணெய்க் கிணறுகள் உள்ள நகரமான பெட்டிஜானில் கடைகள் சூறையாடப்பட்டன.

மொராக்கோவில் உடனே அரசியல் மாறுதல்கள் தேவை என்று இவர்கள் கலகம் செய்கின்றனர்.

அரேபியர்களின் கட்சியான இஸ்திக்லால் தேசியக் கட்சியினர் பிரெஞ்சுக்காரர்களின் போக்கினை எதிர்த்து பிரெஞ்சு மொராக்கோ முழுமையும் ஒரு மாத காலமாக நேரடிப் போராட்டம் நடத்துகின்றனர்.

மாராகேஷ், ரபாட், அசிமவுர் என்ற ஊர்களில் கடையடைப்பு வேண்டுகோளை நிராகரித்து, கடைகளைத் திறந்து வைத்திருந்ததை எதிர்த்துக் கலகம் செய்த அரேபியர்கள் கடைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்; ஒரு புகையிலைக் கடை உரிமையாளரை சுட்டுக் கொன்றனர்.

சென்ற ஆண்டில் மொராக்கோ சுல்தானை பிரெஞ்சுக்காரர்கள் நாடுகடத்தியது முதல் இக்கலகக்காரர்கள் பலாத்காரச் செயலில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

முகமது பின் யூசப் என்னும் அந்த சுல்தானை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டுமென்று இஸ்திக்லால் கட்சி கோருகிறது. அக்கட்சியினர் பிரெஞ்சுப் பிரதமர் மெண்டஸ் பிரான்சுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் உடனே மொராக்கோவில் மாறுதல் தேவை என்று 'கோரியிருக்கின்றனர்.

சுமார் ஆயிரம் அரேபியர்கள் பெட்டிஜான் நகரில் முன்னாள் சுல்தானின் உருவப் படங்களுடன் ஊர்வலமாகச் சென்று நகர் போலீஸ் நிலையத்தைத் தாக்கினர். பலத்த கல்வீச்சால் போலீஸ் கமிஷனர் தலையில் காயமுற்றார். அரேபியர் பின்னர் போலீஸ் நிலையத்திற்குத் தீயிட்டனர்.

போலீசார் கூட்டத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று அரேபியர் காயமுற்றனர்; 4 யூதர்கள் அரேபியர்களால் கொலை செய்யப்பட்டனர்.

பெஸ் என்னும் நகரில் திங்களன்று கலகக்காரர்கள் மீது சுட்டதில் 12 பேர் கொல்லப்பட்டதாகவும், 25-பேர் காயமுற்றதாகவும் தெரிகிறது.

ஆகஸ்டு திங்கள் முஸ்லீம்கள் மெக்கா செல்லும் புனித மாதமாகையால் அந்த மாதம் முழுவதிலும் நேரடி நடவடிக்கையில் இறங்க அரேபியர் திட்டமிட்டிருக்கின்றனராம்!

காமன்வெல்த் மக்கள் சபை பிரதிநிதிகள் மாநாடு!

இந்தியா 'புறக்கணிக்கிறது!'

நைரோபி, ஆக 6—

காமன்வெல்த் நாடுகளின் மக்கள் சபைப் பிரதிநிதிகளைக் கொண்ட மாநாடு ஆகஸ்டு இறுதியில் நடைபெறும்போது கலந்துகொள்ளாது இருக்கும் ஒரே காமன்வெல்த் நாடு இந்தியா மட்டும்தான் என்று சொல்லப்படுகிறது

இந்த மாதத்தில் மிக முக்கியமான மக்கள் சபைக் கூட்டம் நடைபெற இருப்பதால் கலந்துகொள்ள இயலவில்லை என்று அழைப்பை இந்தியா நிராகரித்துவிட்டதாக, காமன்வெல்த் மக்கள் சபை சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்திருக்கிறாராம்.

இந்தியாவின் இந்த பதில் மிகுந்த ஏமாற்றத்தைத் தந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருப்பதாக அறியவருகிறது.

இந்தியா மாநாட்டில் கலந்துகொள்ளாதது, இந்தியா உண்மையிலேயே மாநாட்டைப் புறக்கணிக்கிறது, என்றே பேசப்படுகிறதாம்!

இந்தியா மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்ப மறுப்பதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. கடந்த ஏப்ரல் மாதத்தில், ஆப்பிரிக்க இராணுவ அதிகாரிகள், 'மாவ் மாவ்' ஒழிப்பு நடவடிக்கைகளின்போது இந்தியத் தூதுவர் அலுவலகத்திடம் புகுந்து தூதுவர் அலுவலக அதிகாரிகளைத் துன்புறுத்தியது ஒன்று. மற்றொரு காரணம், கென்யா, வடக்கு தெற்கு ரொடீஷியா ஆகியவற்றுடன் தென் ஆப்பிரிக்காவும் மாநாட்டில் ஒரு பிரதிநிதியாகக் கலந்துகொள்ளவிருக்கிறது என்பதாகும்—என்றும் விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

வெகும் டாட்டர் பிடிபடுகிறார்!

மக்கார்தி மீது நடவடிக்கை!

வாஷிங்டன், ஆக. 6—

செனட்டர் ஜோசப் மக்கார்தி மீதுள்ள குற்றச்சாட்டுகளை ஒரு கண்டனத் தீர்மான குழுவில், ஒரு தனிக் குழுவிடம் அனுப்பி, விசாரணை செய்ய, அமெரிக்க செனட் சபை முடிவு செய்தது இந்த முடிவுக்குச் சாதகமாக 75 ஓட்டுகளும் பாதகமாகப் 12 ஓட்டுகளும் பதிவாயின.

உதகமண்டலத்தில் செயற்கைப்பட்டு உற்பத்தி

உதகமண்டலம், ஆக 6—

தைல மரங்களின (யூகலிப்டஸ்) குழம்பிலிருந்து செயற்கைப் பட்டு உற்பத்தி செய்ய முடியும் என்றறிந்த வெளிநாட்டுக் கம்பெனியொன்று, அவ்வாறு செயற்கைப் பட்டு உற்பத்தி செய்வதற்காக மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளதாகத் தெரிகிறது.

அனுமதி கிடைத்தால் உதகமண்டலம் செயற்கைப்பட்டு உற்பத்தியாகும் தொழிற் பிரதேசமாக மாறக்கூடும்.

விசாரணை முடிந்தது!

இந்தூர், ஆக. 6—

கடந்த ஜூலை 21-ல் இந்தூரில் நடைபெற்ற குழப்பங்கள் பற்றிய தனது விசாரணை அறிக்கையை இந்தூர் மாவட்ட நீதிபதி பாபுலால் ஜோஷி மத்திய பாரத அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

டென்சிங்கிற்குப் பதவி!

மலை ஏறுவது, அது பற்றி ஆராய்ச்சி நடத்துவது ஆகியவற்றிற்கான இமாலய மலை ஏறும் கழகத்தின் 'டைரெக்டராக' ஆகஸ்டு 1-ந் தேதி முதல் எவரெஸ்ட் ஏறிய டென்சிங் நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்போது ஸ்விட்சர்லாந்தில் இருக்கும் அவர் செப்டம்பரில் டார்ஜிலிங் திரும்பக்கூடும் எனத் தெரிகிறது.

கால் நடை:

காஷ்மீரின் பலவகை இன உற்பத்தி!

காஷ்மீர் அரசாங்கம் ஆஸ்திரேலியாவிலிருந்து இரு நூறு பெண் ஆடுகளையும், 50 செம்மறியாடுகளையும், வேறு வேறு வகை இன உற்பத்திக்காக இறக்குமதி செய்துள்ளதாகத் தெரிகிறது.

ஒரு செயற்கை இன உற்பத்தி நிலையமும் இரண்டு கால்நடை ஆராய்ச்சிப் பண்ணைகளும் அங்கு திறக்கப்பட்டிருக்கின்றன!

ஆந்திராவில் பெரும்பான்மையினர் பிற்பட்ட வகுப்பினரே!

பிற்பட்ட வகுப்பு கமிஷனிடம் ஆந்திர சர்க்கார் அறிக்கை

‘தீண்டாமை சுலபமான பிரச்னையல்ல!’

காகா கலேல்கர் கருத்து

கர்நூல், ஆக. 6—

ஆந்திர ராஜ்ய மக்களில் பாதிப் பேருக்கு மேல் பிற்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

பிற்பட்ட வகுப்புகளின் கமிஷனிடம் ஆந்திர சர்க்கார் இச்செய்தியைத் தெரிவித்திருக்கிறது.

கமிஷனின் தலைவர் காகா கலேல்கர், பிற்பட்ட வகுப்பினரின் பட்டியலில் இன்னும் பல வகுப்பினரின் பெயர்களைச் சேர்க்கவேண்டுமென்று கூறினாராம்.

ஆந்திர மாநில நிதி அமைச்சர் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இன்னும் அதிகமான வகுப்பினர் பெயர்களைச் சேர்க்கத் தாங்கள் விரும்புவதாகவும், ஆனால் இதனால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது என்றும்; ஏனெனில், ஆந்திர மக்களில் பெரும்பான்மையோர் பிற்பட்ட வகுப்பினராக உள்ளனர் என்றும் கூறியுள்ளார்,

இப்போதைய புள்ளி விபரங்களின்படி ஆந்திராவில் 13 சதவீதமக்கள்தாழ்த்தப்பட்ட வகுப்பினராகவும், மூன்று சதவீதம் மலை ஜாதியினராகவும், 34 சதவீதம் பிற்பட்ட வகுப்பினர்களாகவும் உள்ளனர்.

பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், காகா கலேல்கர் சட்டத்தின் மூலமாக மட்டும் தீண்டாமையை ஒழிக்க முடியாதென்றும், பல ராஜ்யங்களில் தான் கண்ட அனுபவத்திலிருந்து இப்பிரச்சினை சுலபமாக தீர்க்கக் கூடியதாக இல்லை என்றும் கூறினர்.

இதனைப் போக்க பெரும்பான்மை மக்களிடையே, சமுதாயத் துறையில் புரட்சிகரமான மாற்றம் மிகவும் அவசியமானது என்று அவர் மேலும் கூறினர்.

அடுத்த டிசம்பர் திங்களில் கமிஷன் தனது அறிக்கையை இந்திய சர்க்காருக்குத் தரும் என்று தான் நம்புவதாக அவர் கூறினர்.

தமிழ்நாடு உழவர் கட்சி மாநாடு

1—8—54-ல் விருத்தாசலம் தாலூக்கா தமிழ்நாடு உழவர் கட்சி மாநாடு சினிமா தியேட்டரில், திண்டிவனம் தோழர் வி. கோபாலகவுண்டர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாநாட்டிற்கு ஏராளமான பிரதிநிதிகளும், பார்வையாளர்களும் வந்திருந்தனர். மாநாட்டில் தோழர்கள் திருக்குறளார் வி. முனுசாமி எம்.பி., ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., எம். பி. சுப்ரமணியம் எம்.எல்.ஏ., எம். கே. ராமமூர்த்தி, க. அன்பழகன், சிற்றனி சுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர்.

மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) கடந்த பொதுத் தேர்தலில் நாம் உழைப்பாளி கட்சியாகவிருந்த சமயத்தில் ஆதரித்து வேலை செய்து வெற்றி தேடித் தந்த பல முற்போக்கு கட்சிகளை இம்மாநாடு பாராட்டுகிறது.

(2) உழவர் மக்களாகிய பெரும்பான்மை திராவிட மக்களின் நன்மையைக் கருதியும், தென்னாட்டில் அரசியல், பொருளியல், சமுதாய இயல் முன்னேற்றத்தையும், உரிமையும் கருதியும் திராவிட நாடு இலட்சியத்திற்காக உழவர் கட்சி பாடுபடுமென்றும், மற்றும் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அழித்துவிடாதீர்!

நாம் வாழும் முறை வன்மை மிக்கது; ஆயினும், அதன் அமைப்பு மிகவும் மென்மையானது; அது மிகப் பல மெல்லிய இழைகளால் ஆனது. விநோத வேட்கையுள்ள எண்ணிறந்த ஆடவர்—பெண்டிரால் அது பல நூற்றாண்டுகளாக அவர்களது பொறுமையாலும், தியாகத்தாலும் ஒன்றாய் இணைத்துச் செய்யப்பட்டது; அது ஏழைகளுக்கும்-பணக்காரருக்கும் பாதுகாப்பு மேற்சட்டையாக அமைந்துளது. அதனை நாம் அழித்துவிடக் கூடாது. அதை அழித்துவிட்டால் அதற்குரிய ஆய்வும் ஆற்றலும் மனிதன் எங்கே, எப்பொழுது மீண்டும் காண முடியும்?

—வெண்டல் வில்கி

விமான தளங்கள்

கோவாவை என்ன விலை கொடுத்தேனும் தன் வசமே வைத்திருப்பது என்ற போர்த்துகீசியரின் முடிவு கோவாவில் மூன்று விமானதளங்களை வெளிநாட்டாரின் உதவியுடன் கட்ட முனையும்படி செய்துள்ளது. அந்த மூன்றில் மிகப் பெரியது வான்கோ எனும் இடத்திற்கருகில் இருக்குமெனத் தெரிகிறது.

சுவாமிகளே! வருக!!

அமெரிக்க நாட்டில் நியூயார்க் நகரத்தில் உள்ள ராமகிருஷ்ண-விவேகானந்தர் கழகத் தலைவரான சுவாமி நிகிலானந்தா, இம்மாத முடிவில் இந்தியாவிற்கு, ‘யாத்திரை ஸ்தலங்களையும்’ கலாச்சார நிலையங்களையும் கண்டு செல்வதற்காக வருகிறாராம்.

ஆராய்கிறார்களாம்!

இந்நாவில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து அறிந்துவர, திருமதி ரேணு சக்ரவர்த்தி, எம். பி., திரு. வி. பி. நாயர் எம். பி. ஆகிய இருவரையும் அகில இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் “பொலிட்பீரோ” இந்நாவுக்கு அனுப்பி உள்ளதாம்.

அவரே பாராட்டுகிறார்!

அஜ்மீரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசின் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை திறம்பட, சிறப்புறச் செய்திருந்தமைக்காக அஜ்மீர் மாநில முதல் மந்திரி ஹரிபாவ் உபாத்தியாவுக்கு பண்டிதர் பாராட்டுக் கடிதம் ஒன்று எழுதி உள்ளாராம்.

வாக்குச் சீட்டு!

புல் தரையில் படிந்துள்ள அமைதியாய் விழுவதே போன்றது இக ஆயுதம்; அது சுதந்திர மனிதனின் எண்ணத்தை முற்றுவிக்கின்றது!

வடநாட்டில் வெள்ளச் சேதங்கள்!

வடநாட்டில் உள்ள கோசி, பிரம்மபுத்திரா அலைகளின் கிளை நதிகள் ஆகிய நதிகளில் கடந்த ஜூலை 2-ந் தேதி தொடங்கிய பெருவெள்ளம், ஏறக்குறைய ஜூலை முடிய அடங்கவில்லை. அந்த வெள்ளம், பெருத்த பொருள் நஷ்டத்தையும் ஏராளமான உயிர் சேதத்தையும் விளைவித்து விட்டிருக்கிறது.

பல இடங்களில் நகரங்களும், கிராமங்களும் வெள்ளப் பெருக்கிலேயே மூன்று நான்கு நாட்கள் மூழ்கி இருக்கின்றன. பயிர்களும், பலதரப்பட்ட கால்நடைகளும் பாழாக்கப்பட்டிருக்கின்றன.

போக்குவரத்து சாதனங்கள், தந்தி, தபால் இயக்கம் எல்லாம் துண்டிக்கப்பட்டு கொடுமைகள் பல நிகழ்ந்துள்ளன என்று தெரிகிறது.

டியோரியா மாவட்டத்தில் 100 சதுர மைல் சுற்றளவுள்ள 90 கிராமங்கள் தண்ணீருக்குள் மூழ்கினவாம்.

ஹொசளாத்தி எனும் இடத்தில் 600 வீடுகள் மூழ்கடிக்கப்பட்டு 3,000 பேர் வீடிழந்து தவித்தனராம்.

வடக்கெல்லைப்புரத்தில் உள்ள சபாங், லோகித் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் வெகுவாக பாதிக்கப்பட்டனவாம்.

மைமென் சிங் மாவட்டத்தில் உள்ள எல்லா ரயில் நிலையங்களும் எட்டு அடி வெள்ள நீரில் மூழ்கினவாம்.

ரயில் நிலைய அதிகாரிகள் எல்லாம் வெள்ளப் பெருக்கைக் கண்டு உயிர் தப்புவதற்காக நிலையங்களைக் காலி செய்துவிட்டு ஓடியே விட்டனராம்.

சித்தலக்யா எனும் நதிக்கரையிலுள்ள கஞ் எனும் மிகப் பெரிய நகரத்தையே, சிலபெரும் சாலைகளைத் தவிர, வெள்ளத்தால் மூழ்கியது.

தபால் தந்திப் போக்குவரத்துச் சாதனங்கள் எல்லாம் துண்டிக்கப்பட்டனவாம்.

இந்தக் கொடுமையான வெள்ளப் பெருக்கினால் சேர்ந்துள்ள கஷ்டங்களை சரிசெய்யவும் பாதிக்கப்பட்டோரைப் பராமரிக்கவும், பிரதம மந்திரி பண்டிதர் தேசிய நிவாரண நிதியிலிருந்து பணம் திரட்டி உதவி வருகிறார்,

“ஆப்பிரிக்கர்களின் எழுச்சி தேசிய உணர்வாகும்!”

“எவராலும் அதை தடுக்க முடியாது!”

கேம்பிரிட்ஜ், ஆக. 6—

“ஆப்பிரிக்காவில் உருவாகியுள்ள தேசிய உணர்வு இயற்கையானது என்பதை ஏற்றுக் கோள்வதுடன் அந்த தேசிய உணர்வை நாம் வரவேற்கவும் வேண்டும்; அந்த உணர்வு தடுத்து நிறுத்தப் படக்கூடியது அல்ல என்பதையும் நாம் உணர வேண்டும்,”

—இவ்வாறு ஆப்பிரிக்க ‘பீரோ’வின் தலைவரான ஹெமிங்போர்டு என்பவர் குறிப்பிட்டார்,

ஆப்பிரிக்காவில் கடந்த 25 ஆண்டுகளாக கல்வித்துறையில் பணி புரிந்து வந்துள்ள அவர், இங்குள்ள ‘விபரல்’ கோடைகால பள்ளியில் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

“உலகத்தின் பல்வேறு பகுதி மக்களும் தேசிய உணர்வால் உந்தப்பட்டு உரிமைக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் தீர்க்கமாக உணர்ந்து கொண்டாலன்றி ஆப்பிரிக்காவில் எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்க்க முடியாது.

“ஆப்பிரிக்காவில் இன்று ஏற்பட்டுள்ள எழுச்சி, கம்யூனிசத்தை கருவாகக் கொண்டுள்ளது என்று சொல்லப்போதுமான காரணங்கள் இல்லை. அந்த எழுச்சி தேசிய உணர்வின் அடிப்படையில் தோன்றியுள்ள எழுச்சியாகும். ஆனால், பிரிட்டனுக்கு எதிர்ப்பான எண்ணங்கள் வலுப்பதற்கு இடமளித்தால் ஆப்பிரிக்கர்கள் கம்யூனிசத்தின் பக்கமாக சாயக் கூடும்.”

அழகிரி நினைவு மன்றம் துவக்கம்

25—7—54 காலை 9-30 மணிக்கு சென்னை தம்மாழ்வார் பேட்டை, சின்னபாபு தெரு, கெ. 14 என்னுள்ள கட்டிடத்தில் தோழர் அ. ச. தமிழன்பன் தலைமையில் ‘அழகிரி நினைவு மன்றம்’ துவக்கப்பெற்றது.

1—8—54 ஞாயிறு காலை 10 மணிக்கு மேற்படி கட்டத்தில் தோழர் கோ. பழனி தலைமையிலும், அ. ச. தமிழன்பன் முன்னிலையிலும் மன்றத்திற்கான சட்டதிட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, மன்றத்தின் துவக்க விழாவினை 2 மாத காலத்திற்குள் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

சென்னை — 21 கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம்

1—8—54 இரவு 8 மணிக்குத் தோழர் வி. பெரியசாமி அவர்கள் தலைமையில் கீழ்வரும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: பி. எம். இராமையா; துணைச் செயலாளர்: என். டி. என். மூர்த்தி; பொருளாளர்: எம். என். இன்மாயில் பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

‘தவறியவள்’—(நாடகம்)

25—7—54 இரவு 10 மணிக்கு மதுரைத் தமிழ்ச் செல்வி அரங்கத்தாரின் ‘தவறியவள்’ எனும் சமூக நாடகம் சென்னை வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரி அரங்கில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது, நாடக இறுதியில் அண்ணா அவர்கள் நடிகர்களைப் பாராட்டிப் பேசினார். பல கிளைக் கழகங்கள் சார்பில் அண்ணா, பி. எஸ். இளங்கோவன், தோழியர் பி. எஸ். செல்வா ஆகியோருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. நாடக அரங்கத்தின் சார்பில் அண்ணா அவர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

ஊ.பு.அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

அருப்புக்கோட்டை, ஆக. 5— படிப்பகத்தின் சொற்பயிற்சிக் குழுவின் 30-வது கூட்டம் தோழர் வி. பி. இரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது, ‘மதம் தேவையா?’ என்னும் பொருள் பற்றிப் பலர் பேசினர்.

காஞ்சி கல்யாணசுந்தரனார் மைந்தர் தோழர் அருணாசலம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மஞ்சைநகர் மறுமலர்ச்சி மன்றம்

திராவிட நிலை, வாரந்திர, மாத முற்போக்கு இதழ்கள், மன்றத்திலே வாசிக்கவும், தங்கள் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று வாசித்துத் திருப்பிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென மன்றத்தினர் அறிவிக்கின்றனர்.

துவக்கப்பள்ளி திறப்பு

ஆத்தூர் தாலுக்கா பழனியாபுரி கிராமத்தில் நாட்டாண்மைக் கழக துவக்கப்பள்ளியை 26—7—54ல் திரு கே. சுப்பிரமணியம் தலைமையில் திரு மந்தராய கவுண்டர் திறந்து வைத்தார். திரு எம். பி. சுப்பிரமணியம் பி. ஏ., எம். எல். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

திருமணம்

16—7—54ல், வேலம்பட்டு கிராமத்தில் தி. மு. கழகத் தோழர் மு. இராமன் மிர்கும்—தோழியர் வ. கே. வீரம்மாளுக்கும் மணமகன் இல்லத்தில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் அப்பாவு, து. மாணிக்கம் ஆகியோர் பாராட்டிப் பேசினர். இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—பாப் பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

இந்தியா – பாகிஸ்தான் – கால்வாய் நீர் தகராறு!

சுமூகமாக முற்றுப் பெறக்கூடும்!

பாகிஸ்தான் அரசாங்கம், உலக பாங்கியின் ஆலோசனையுடன், மாரலா – ரவி தொடர் என்ற பெயரில், நீர்தேக்கம் ஒன்றை அமைப்பது குறித்து விவரமாக ஆராய்ந்து அறிந்து கூற அமெரிக்க அரசாங்கத்தை இரண்டு ‘எஞ்ஜினியர்’களை அனுப்பித்தரக் கோரி இருந்ததாம்; அதன்படி ஒருவர் கராச்சி வந்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த முயற்சியினால் உருவாகும் கால்வாய், சினப், ரவி நதிகளை ஒன்றுபடுத்துவதாய் அமையும் என்றும், சுமார் 85 கோடி ரூபாய் இதற்கு செலவாகக்கூடும் எனவும் தெரிகிறது.

1954-ம் ஆண்டு பிப்ரவரியில் உலக பாங்கி தந்த திட்டங்களின் பெரும்பகுதியை பாகிஸ்தான் இப்போது ஏற்றுக்கொள்ளும் என்றும், இந்தியா – பாக். நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள தண்ணீர் தகராறுகள் முற்றுப் பெற வழி கோலக்கூடும் எனவும் நம்பப்படுகிறது.

மனித ரத்தத்தில் உப்பு ஒரு முக்கிய பொருள்!

மனித ரத்தத்தில் 3 சதவிகிதம் உப்பு இருக்கின்றது. தினசரி வாழ்க்கையில் மனிதனுக்கு சராசரி 10 கிராம் உப்பு தேவை. உட்கொள்ளும் உணவிலிருந்து இது மனிதனுக்குக் கிடைக்கின்றது.

துவரை சாகுபடி

நடப்பு ஆண்டில், துவரை சாகுபடி விஸ்தீரணம் 57,76,000 ஏக்கராவும், உற்பத்தி 17,83,000 டன்னுமாக இருக்குமென்று தெரிய வருகிறது.

கோதுமை சாகுபடி

நடப்புவருஷத்தில் கோதுமை சாகுபடி விஸ்தீரணம் 2,47,71,000 ஏக்கராவும், உற்பத்தி 71,97,000 டன்னுமாக இருக்குமென்று தெரியவருகிறது.

உலக அரங்கில்

லண்டன் :

மாஞ்செஸ்டரில் உள்ள இந்திய மாணவர் சங்கத்தின் சார்பில் இந்திய செய்தித் தாள்களின் கண்காட்சி ஒன்றை, மாஞ்செஸ்டரில் ஆகஸ்டு 8-ம் தேதியன்று, இங்கிலாந்தில் உள்ள இந்தியத் தூதவர் அலுவலகத்தைச் சேர்ந்த பி. வி. ஆர். ராவ் என்பவர் திறந்து வைப்பார் எனத் தெரிகிறது. ஒரு வார காலம் பார்வையிலிருக்கும் அக்கண்காட்சிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள டாக்டர் ராதா கிருஷ்ணன், இந்தியாவில் பத்திரிகைகள் பெற்றுள்ள உயரிய இடத்தையும், அவைகளின் சிறந்த தரத்தையும் எடுத்துக் காட்டுவனவாக அக்கண்காட்சி அமையும் என தான் நம்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

* * *

பிரிட்டிஷ் வெளி விவகார இலாகா உதவி மந்திரி டக்டலஸ் டாட்ன் மார்க்கர், தென் கிழக்கு ஆசிய நாடுகளில் நல்லெண்ணத் தூதுவராக ஒருமாத காலம் சுற்றுப் பயணம் செய்ய வரும் செவ்வாயன்று புறப்படுவாராம். அவர் பாகிஸ்தான், இந்தியா, பர்மா, தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்த நாட்டு அதிகாரிகளுடன் தென் கிழக்கு ஆசியப் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவாரெனவும் தெரிகிறது.

* * *

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட 'ஆன்ஸஸ்' கவுன்சில் வாஷிங்டனில் கூடி தென்கிழக்காசிய நாடுகளின் பாதுகாப்பிற்கான கூட்டு ஒப்பந்தம் பற்றி ஆலோசனை நடத்தினராம்.

☆

சிங்கப்பூர் :

அமெரிக்க, விமான, கப்பல், தரைப்படைகளைச் சேர்ந்த 14 அதிகாரிகள், இங்குள்ள, வெள்ளை ராணுவ அதிகாரிகளுடனும், மால்கம் மாக்டொனால்ட் என்ற பிரிட்டனின், தென்கிழக்காசிய கமிஷனர்-ஜெனரலுடனும் இரண்டு நாள் கூடிப் பேசுவதற்காக வந்துள்ளதாகத் தெரிகிறது.

☆

பிரஸ்ஸல்ஸ் :

ஐரோப்பிய பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தம் பற்றிய பிரஸ்ஸல்ஸ் மாநாடு ஆகஸ்டு 19-ம் தேதியன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

☆

பான் :

கிழக்கு ஜெர்மனியில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு அமெரிக்க குடியரசு தலைவர் ஐசனோவர் அனுப்பிய உணவுப் பொருள் உதவியை கிழக்கு ஜெர்மனி ஏற்றுக்கொண்டதாம். ஏற்றுக் கொண்டதற்கான அறிவிப்பை, கி. ஜெர்மனியிலிருக்கும் சோவியத் தூதவர் ஜி. எம். புஷ்கின், மே. ஜெர்மனி பிரதம மந்திரி ஓட்டோ க்ரோட்வோல் ஆகிய இருவரும் அமெரிக்க தூதருக்குக் கடித மூலம் தெரிவித்தனராம். தனது உதவியை கி. ஜெர்மனி ஏற்றுக் கொண்டமைக்காக ஐசனோவர் நன்றி தெரிவித்திருக்கிறாராம்.

☆

கராச்சி :

'யோர்க்ஷைர் பியோ டயன்' எனும் போர்த்துகீசிய அதிசயக் கப்பல் 250 அதிகாரிகளுடன் கோவா செல்வதற்காக வந்துள்ளதாம். இக்கப்பல் கோவாவிற்கு வருவது அதிகாரப்

வான்கோவெர் :

"உலகத்தின் மற்றெல்லாப் பகுதிகளைப் போலவே, தென் கிழக்கு ஆசியாவிலும் ஒரு கூட்டுப் பாதுகாப்புத் தேவை என்பதை நாம் உணருகிறோம்." என்று கானடா வெளி நாட்டு மந்திரி லெஸ்டர் பியர்சன் குறிப்பிட்டார். அவர் மேலும், 'இப்பொழுது கம்யூனிஸ்டு சீனாவை அங்கீகரிக்கும் விஷயத்தைக் கருதுவதற்கில்லை,' எனவும் கூறினார்.

★

டுனிஸ் :

டுனிஷியாவின் புதிய அரசாங்கம், தேசியவாதியான தாகர் பென் அமார் என்பவர் தலைமையில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. 11 மந்திரிகளைக் கொண்ட பட்டியல் பிரெஞ்சு ரெசிடெண்ட்-ஜெனரலிடம் தரப்பட்டிருக்கிறது.

☆

கொழும்பு :

இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை, சீனக் குடியரசிடம், இலங்கையும் ராஜீயத் தொடர்பு கொள்வதுபற்றி பீகிங் அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்துக் கொண்டிருப்பதாக இலங்கை மக்கள் சபையில் அறிவித்தார். மேலும் அவர், பிரான்ஸ், எகிப்து, ஹாலந்து ஆகிய நாடுகளிலும் இலங்கை சார்பாக கௌரவத் தூதவர்களை நியமிக்கவும் எண்ணியிருப்பதாகவும் அறிவித்தார்.

☆

நைரோபி :

கென்யா மந்திரியான ஈ. ஏ. வாசே என்பவர் காமன்வெல்த் நாடுகளின் மக்கள் சபைப் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்ற இந்தியாவின் முடிவை மாற்றிக்கொள்ளத் தூண்டுமாறு இங்கிலாந்தில் உள்ள இந்தியத் தூதவருக்கு கடைசி கெடு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளாராம்.

முகமூடி அணிந்த பெண்களின் துணிச்சல்!

மொராக்கோ கலகம் முற்றுகிறது!

பிரெஞ்சு ரெசிடெண்ட்—ஜெனரல் பாரிஸ் செல்கிறார்

'பெஸ்' நகரில் நாடுகடத்தப்பட்ட மொராக்கோ சுல்தானை ஆதரிப்பவர்கள் கலகம் செய்து ஐந்து பேரைக் கொன்றனர்; 10 பேர் காயமுற்றனர் என்று தெரிகிறது.

இக்கலகத்திற்கு முகமூடி அணிந்த பெண்களே தூண்டுகோலாக இருந்தனர் என்று தெரிகிறது.

கலகக்காரர்கள் கடைகளுக்கு தீயிட முயன்றனர் என்று தெரிகிறது.

கசபிளாங்காவில் சுல்தான் நாடுகடத்தப்பட்ட தினத்தன்று, நெருக்கடி காணப்பட்டதாம். ஏராளமான அரேபியப் பெண்கள் குழந்தைகளுடன் நகரை விட்டு வெளியேறுகின்றனராம்.

மொராக்கோவில் உள்ள பிரெஞ்சு ரெசிடெண்ட்-ஜெனரல் பாரிஸ் செல்கிறார். அவர், மொராக்கோ அரசியல் கொந்தளிப்பை அடக்கவும், மொராக்கோமக்களின் கோரிக்கைக்கு சரியான திட்டமொன்றுடனும் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

—(மன்னார் பக்க செய்தி 2-ம்

18,000 பேர் காலராவுக்கு பலி!

சென்னை, ஆக. 6—

சென்னை மாநிலத்தில் 1953-ம் ஆண்டில் காலரா நோயால் 18 000 பேர் மாண்டனர் என சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

நெய்வேலி:

செலவுகள் அத்தனையும் சென்னையே செய்கிறது!

சென்னை, ஆக 6—

"நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் சம்பந்தப்பட்ட எல்லாசெலவுகளையும் சென்னை அரசாங்கமே செய்து வருகிறது. சில இயந்திர சாதனங்களை மட்டும் மத்திய அரசாங்கம் கடனாகக் கொடுத்துள்ளது. நிலக்கரிச் சுரங்க வேலைக்குத் தேவையான தொழிலாளர்கள், இயந்திர சாதனங்கள், பரிசோதனை நிலையங்கள், நிலங்களை வாங்குதல், கட்டிடங்கள் எழுப்புதல், வேலை செய்வோருக்கு கூலி தருதல் ஆகியவைகளில் சென்னை அரசாங்கம் செலவு செய்து வருகிறது,"

என்று விவசாய மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

திருவள்ளுவர் தினம்

விடுமுறை கிடையாதாம்!

சென்னை, ஆக. 6—

திருவள்ளுவர் தினம் என்ற ஒரு நாள் இல்லாமையினால், அதற்கென விடுமுறை அளிக்க இயலாதென்று நிதி மந்திரி சுப்பிரமணியம் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் சட்ட சபையில் அறிவித்தார்.

திருவள்ளுவர் தோன்றிய, மறைந்த நாள் எதுவ என்பதை ஆராய குழு ஒன்றை நியமிக்குமா என்று கேட்கப்பட்டதற்கு, இது பற்றி நிறைய ஆராய்ச்சிகள் ஏற்கெனவே நடைபெற்று குழப்பமான முடிவுகளே காணப்பட்டுள்ளன என்று நிதி மந்திரி குறிப்பிட்டார்.

படகு கவிழ்ந்தது

42 பேர் பலி!

டாக்கா, ஆக. 6—

இரண்டு பெண்கள் உள்பட 42 பேர்கள், நீராவிக் கப்பல் ஒன்றிற்கு ஒரு சிறிய படகு மூலம் செல்லுகையில் படகு கவிழ்ந்து மாண்டனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

அதிகாரபூர்வமாக இது பற்றிய அறிக்கைகள் வெளிவரவில்லை எனத் தெரிகிறது.

பரிட்சை தொலைகிறது!

பாட்டியாலா, ஆக 6—

பெப்சு மாநிலத்தில் ஆறுமுதல் பதினொரு வயதுவரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு பரிட்சை மூலம் தேர்வு அளிக்கும் முறை கைவிடப்படுகிறது. இனி, அந்த மாணவர்களின் வயதையும், அவர்கள் வகுப்பில் நடைபெறும் படிப்பு முன்னேற்றத்தையும் பொறுத்தே அடுத்த மேல் வகுப்பிற்கு தேர்வு அளிக்கப்படுமாம்.

இந்தத் தகவலை பெப்சு மாநில கல்வி அமைச்சர் பிரீஷ்பான்

கோவிலில் மதுக்கடை!

மூவர் கைது!

அம்பாலா, ஆக. 6—

அம்பாலாவிற்கருகில் உள்ள யமுனா நாகர் எனும் இடத்தில் இருக்கும் கோவில் ஒன்றில் 'மதுக்கடை' ஒன்று இருப்பதைப் போலீசார் கண்டு பிடித்தனர். வெகு தந்திரமாக கோவிலை வளைத்து, அங்கிருந்த ஏராளமான சாராயப் புட்டிகளைப் பறிமுதல் செய்தனர். அந்த 'மதுக்கடை'யை நிர்வகித்து வந்த மூன்று பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

110 தி. மு. கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தனர்.

நாகர்கோவிலில் நடைபெற்ற அறப்போரை தி. மு. கழக முன்னணி வீரர்களான இரா. இளம்வழுதி, மதுரை என். முத்து, வி. எம். ஜான், வன்னியப்பெருமாள் ஆகியோர் மேற்பார்வையிட்டு, தொண்டர்களை உற்சாகப்படுத்தினர்.

செங்கோட்டை நீதிமன்றத்தில் 31 தி. மு. கழகத் தொண்டர்கள் ஐந்து குழுவினராக மறியல் செய்தார்கள். இவர்கள் அனைவரையும் திரு—கொச்சி போலீசார் கைது செய்தனர். அமைதியான முறையில் மறியல் செய்த அறப்போர் வீரர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிகிறது.

செங்கோட்டை அறப்போர்களத்தைத் தூத்துக்குடித் தோழர் நடராசன் மேற்பார்வையிட்டு, தொண்டர்களுக்கு உற்சாகமூட்டி வந்தார்.

தி. மு. கழகத்தின் அடையாள மறியல் மிகவும் அமைதியாகவும், கண்ணியத்துடனும் நடைபெற்றது.

உண்ணாவிரதம்

திருவாங்கூர் தமிழர்களின் கோரிக்கை நிறைவேறுவதற்காக தமிழர்கள் தலைவர்களில் ஒருவரான தோழர் காந்திராமன் 'சாகும்வரை' உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

பண்டித நேருவுக்கும் ஜனாதிபதி இராஜேந்திரப் பிரசாத்துக்கும் காந்திராமனின் உண்ணாவிரதம் பற்றி தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

செங்கோட்டையில் பொதுக் கூட்டம்

ஆகஸ்டு ஐந்தாம் தேதியன்று செங்கோட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் மதுவான் நடைபெற இருக்கும் தி. மு. கழக அறப்போர் குறித்து மதுரை என். முத்து, தூத்துக்குடி நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள் என்று தெரிகிறது.

இந்தியா பெண்டிர் அனைவருக்கும் சிவாயமான பாதுகாப்பும், அவர்களுக்கும் அவர்களுடைய மக்களுக்கும் நம்பிக்கையும் உறுதியாக ஏற்படும் முறையில் சமுதாயத்தை அமைத்து, மக்களின் மானத்தை "மக்களாட்சி" தருந்தவாறு மதித்தால்தான் மக்களுக்கு அதனிடத்தில் பற்று உண்டாகும்.

கழகக் கூட்டம்

★

சன்னாநல்லூர்

10—8—54 செவ்வாய் மாலை

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

மயிலை திருவள்ளுவர் கழக 9வது ஆண்டுவிழா

10—8—54 மாலை 5 மணிக்கு மயிலை, குப்பபேட்டை, வீரப்பெருமாள் தெரு, கார்ப்பரேஷன் கழக ஆண் பள்ளி திடல் திறந்த வெளி அரங்கில், தோழர் கண்ணன் தலைமையில் தோழர்கள் க. அன்பழகன், சி. பி. சிற்றரசு ஆகியோர் சூறான் சொற்பெருக்காற்றுவர். அன்று இரவு 9.30 மணிக்கு கழக வளர்ச்சி நிதிக்காக தோழர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினர் நடிக்கும் 'இழந்த காதல்' நாடகம் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

8—8—54 காலை $10\frac{1}{2}$ மணிக்கு சென்னை, முத்தியால்பேட்டை, சாலை விநாயகர் கோவில் தெருவில் தோழர் இரா. மூர்த்தி தலைமையில் 'குறளும் கீதையும்' என்ற பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சொற் பயிற்சி வகுப்பு

8—8—54 மாலை 2 மணிக்கு திருவல்லிக்கேணி "கே. என். பாண்டியன் படிப்பகத்தில், தோழர் மா. ப. சாரதி தலைமையில் 'மதம்' என்னும் பொருள் பற்றி பல அங்கத்தினர்கள் பேசுவர்.

ஷேக் அப்துல்லா

நலமாக இருக்கிறாராம்

ஸ்ரீநகர், ஆக. 6—

சிறையில் உள்ள காஷ்மீர் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லா நலமாக இருக்கிறார் என்று சிறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலும், சுகாதார டைரக்டருமான ராம்லுத் சோப்ரா கூறினார்.

ஷேக் அப்துல்லாவின் உடல் நிலை சரியில்லை என்றும், அவர் குல்மார்க் என்னும் மலைவாசஸ்தலத்திற்கு கொண்டு செல்லப்பட்டார் என்றும் பாகிஸ்தான் வானொலியில் வெளியான அறிவிப்பு ஒன்றை மறுத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அப்துல்லாவை தானே நேரில் பரிசீலித்ததாகவும், அவர் நன்கு உணவு உட்கொண்டு, பாட்மிட்டன் விளையாடுவதாகவும் சோப்ரா மேலும் கூறினார்.

தீர்க்க முடியும்!

ஜனநாயகத்தின் குறைகளை யெல்லாம் இன்னும் மிகுதியான ஜனநாயக முறைகளைக் கொண்டு தீர்க்க முடியும்!

சேலம் வ. உ. சிதம்பரம் பிள்ளை மார்க்கெட் வியாபாரிகள் சங்கம் 30—7—54ல், வ. உ. சி. மார்க்கெட்டில் தோழர் வேணு கோபால் தலைமையில் சங்கக் கூட்டம் நடைபெற்றபோது, அக்கூட்டத்தில், வியாபாரிகள் செய்த கடையடைப்பை ஆதரித்தும், திருவாங்கூர் தமிழர்கள் நடத்தும் உரிமைப் போராட்டத்தை ஆதரித்தும், சேலம் வ. உ. சி. மார்க்கெட்டில் ஓர் "டேக்கஸ்" கட்டித்தர முனிசிபாலிடி முன்வரவிட்டால், கோடி கடையடிக்கையில் சங்கம் இறங்க நேரிடும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிலைமை முன்னேற்றக் கழகத் தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்கள் ... அலுவலகத்தில் ... ஆகிய ... தெரு ... வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை எம். ஏ.